# ஷேர் ஆட்டோ, டாக்சி சேவையில் 18 ஆயிரம் பேர் பயணம்

## மெட்ரோ ரயில் நிர்வாகம் தகவல்

சென்னை, செப்.9: மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில் அறிமுகப்படுத்தப்பட்ட ஷேர் ஆட்டோ மற்றும் கேப் சேவையில் 18,797 பேர் வரை பயணப்பட்டுள்ளனர்.

மெட்ரோ ரயில் நிர்வாகம் கடந்த மாதம் 11ம் தேதி ஷேர் ஆட்டோ மற்றும் டாக்சி சேவையை அறிமுகப்படுத்தியது. இதற்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த சேவை டி.எம்.எஸ், அண்ணாநகர், கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி, கிண்டி உள்ளிட்ட 13 இடங்களில் நடைமுறையில் உள்ளது. இந்நிலையில், 20 நாளில் மட்டும் இந்த சேவையை 18,797 பேர் பயன்படுத்தியுள்ளதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்ட செய்திகுறிப்பு:

சோதனை அடிப்படையில் குறிப்பிட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 6 மாதத்திற்கு ஷேர் ஆட்டோ மற்றும் டாக்சி சேவை கடந்த மாதம் 11ம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது. ₹10க்கு 8 மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ சேவையும், ₹15க்கு 5 மெட்ரோ ரயில் நிலையங்களில் டாக்சி சேவையும் செயல்பட்டு வருகிறது.

மெட்ரோ ரயில் நிலையம் அமைந்துள்ள 3 கி.மீ சுற்றுவட்டாரத்திற்கு மட்டுமே இந்த சேவை செயல்படுகிறது. இந்நிலையில், கடந்த மாதம் 11ம் தேதி முதல் 31ம் தேதி வரையில் மொத்தம் 18,797 பேர் டாக்சி மற்றும் ஷேர் ஆட்டோவில் பயணப்பட்டுள்ளனர். குறிப்பாக டாக்சி சேவையை 2,634 பேரும், ஷேர் ஆட்டோ சேவையை 16,163 பேரும் பயன்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.